# குறுந்தொகையில் உணவுச் சூழலியல்

**கி. தேன்மொழி**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்*
*திருச்சிராப்பள்ளி*

**முன்னுரை**

மனிதன் தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள இயற்கையினையும் பற்றி அறிய உதவும் துறையைச் 'சூழலியல்' (ECOLOGY) என்று அழைப்பர். தமிழ் இலக்கியங்களில் (ECOLOGY)-ஐ திணையியல் வடிவில் அமைந்திருப்பதைக் காணலாம். 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று திருமந்திரம் கூறுகிறது. உடம்பை நல்ல முறையில் பேணிக்காக்க உணவு மிக முக்கியமாகும். நம் முன்னோர்கள் உடலையும் உள்ளத்தையும் சிறப்பாக வைத்துக்கொள்ளச் சிறந்த உணவுகளை உண்டு வாழ்ந்துவந்துள்ளனரென்பதை வெளிப்படுத்துகின்றன, தமிழ் இலக்கியங்களில் உணவு குறித்த சூழலியல் செய்திகள் மிகுதியாக இடம்பெறுகின்றன. அவ்வகையில் குறுந்தொகையில் உணவு குறித்த சூழலியலை இக்கட்டுரை ஆராய்கிறது.

**இயற்கையும் உணவும்**

இவ்வியற்கை, மனிதனைப் படைப்பதற்கு முன்னே அவனுக்குத் தேவையான உணவுகளைப் படைத்துவிட்டது. ஆதிமனித காலக்கட்டத்தில் இலை தழைகளை ஆடைகளாக உடுத்திக்கொண்டு நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டு, நீர் முதலிய அத்தியாவசியத் தேவைகளுக்காக ஆற்றங்கரை நாகரிகங்களை வளர்த்து, பச்சைக் காய்கறிகளை உண்டு, பின் நெருப்பின் பயனை உணர்ந்து காய்கறி மட்டுமில்லாமல் விலங்குகளின் இறைச்சிகளையும் நெருப்பில் சமைத்து உண்டும் காலம் போக்கிய மனிதன் இவ்வுலகில் நாவின் சுவையான இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, காரம் என அறுசுவைக்கும் முக்கியத்துவம் தரலானான். தான் எப்படிச் சுவையை விரும்பினானோ அதைப் போலவே தான் வணங்குகின்ற தெய்வத்திற்கும் சுவையான உணவுகளைப் படையலிட்டான். இதற்கு உதாரணமாகப் பெரியபுராணத்தில் கண்ணப்பநாயனார் புராணத்தில் வேடன் தான் சுவைத்து எச்சிலாக்கிய இறைச்சியைச் சிவபெருமானுக்குப் படைக்கும் நிகழ்வு இங்கு கூரத்தக்கது.

**உணவு உற்பத்தியும் பாதுகாப்பும்**

இவ்வுலகில் பிறந்த எல்லா உயிரினங்களுக்கும் உணவு என்பது மிகவும் முக்கியமானதாகும். உணவு தேடி அலைந்த மனிதன் இயற்கையை உற்று நோக்கினான்.

காட்சி ஐயம் தெளிவு என்னும் நோக்கில் மழைபெய்தால் தாவரப்பயிர்கள் விளையும் உண்பதற்குக் காய்கனிகள் கிடைக்கும் என்பதை உணர்கிறான். தரையில் வாழும் மற்ற உயரினங்களிடமிருந்து தான் உற்பத்திசெய்த உணவுகளைப் பாதுகாக்க உயரமான மலையின் பாறைக்குழியில் காய்கறி மற்றும் தானியங்களைச் சேகரித்து வைத்தான். மழை செய்து நிரம்பிய அக்குழியில் சூரியவெப்பம் பட்டு சூடு ஏறி காய்கறிகள் வெந்து காணப்படும். இதன் சுவையை மனிதன் உணர்ந்ததால்தான் இன்று சமைத்து உண்ணும் பழக்கத்தைக் கொண்டுள்ளான் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**திணையியலும் உணவுகளும்**

ECOLOGY என்று வழங்கப்படும் திணையியலைத் தொல்காப்பியர் முதல் கரு, உரிப்பொருளென முப்பெரும் பிரிவுகளாகப் (தொல்.பொருள்.3) பிரித்துள்ளார். மேலும், சங்க இலக்கியங்களும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களில் வாழும் மக்கள் அந்நிலங்களின் சூழலுக்கேற்ப உணவுகளை உற்பத்தி செய்துகொண்டனர். இதில் மலையும் மலை சா;ந்த குறிஞ்சி நிலப்பகுதியில் வாழும் மக்கள் தினை, தேன், மலை நெல் முதலானவற்றையும், காடும் காடு சார்ந்த

முல்லை, நிலப்பகுதியில் வாழும் மக்கள் வரகு, சாமை, முதிரை முதலானவற்றையும், வயலும், வயல் சார்ந்த மருத நிலப்பகுதியில் வாழும் மக்கள் செந்நெல்லரிசி வெண்ணெல்லரிசி முதலானவற்றையும், கடலும், கடல் சார்நத கடற்கரைப்பகுதியில் வாழும் மக்கள் மீன், முதலானவற்றையும், சுரமும் சுரம் சார்ந்த பாலை நிலப்பகுதியில் வாழும் மக்கள் வழிப்பறி செய்தவை, கொள்ளையடித்தவை முதலானவற்றால் பெற்ற உணவுகளையும் சாப்பிட்டனர்.

**தானியங்கள்**

சிட்டுக்குருவிகள் வீட்டின் முற்றத்திலே உலர வைத்த புழுங்கள் அரிசியைத் தின்று தனது குஞ்சுகளுடன் இல்லத்திலே தங்கியிருந்தன என்பதை

**கூம்பிய சிறகர் மணையுறை குரீ,**
**முன்றில் உணங்கல் மாந்தி (குறுந்-46)**

என்ற பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன.

தோழி அறிவனிடம், குற்றமற்ற தெருவில் நாய் இல்லாத முன்றிலில் செந்நெல்லாகிய சோற்றை வெண்ணெல்லோடு ஓரில்லத்தில் பிச்சையாகப் பெற்று வயிறு நிரம்ப உண்டு வாழ்வாயாக என்று கூறினாள். அறிவர் என்போர் துறவு உள்ளமும் எதிர்கால அறிவும் உடைய மேலோர். அவர் இவ்வுலகத்தே வேண்டுவது சோறும் நீரும். எனவே அவற்றை நன்கு பெறுக என வாழ்த்தினாள்.

**ஆசுஇல் தெருவின் நாய்இல் வியன்கடைச்**
**செந்நெல் அமலை வெண்மைவெள் இழுது**
**ஓர் இல் பிச்சை ஆரமாந்தி (குறுந்-277)**

பிச்சை எடுப்போருக்கு ஒரே வீட்டில் வயிறு நிரம்பக் கிடைத்ததல் இன்பமாதலின் ‘ஓரிற்பிச்சை’ என்றாள். அறிவன் என்பவர்கள் கொல்லாமை முதலிய அறங்களைக் கடைபிடித்து வரும் அந்தணர் இல்லங்களிலே சென்று ஏற்று உண்ணும் வழக்கம் உடையவர்கள் என்பதை இப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

**மது**

பண்டைக் காலத்தில் மக்கள் ‘கள்’ குடித்துள்ளனர். கள்ளைக் குடித்ததோடு மட்டுமில்லாமல் அவற்றைத் தயாரிப்பது கெட்டுப்போகாமல் பாதுகாப்பது முதலியவற்றையும் குறித்துள்ளனர்.

**மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன**
**இட்டுவாய்ச் சுனைய பருவாய்த் தேரை (குறுந்-193)**

மட்டம் என்றால் தேறல் என்று பொருள். கள்ளைத் ‘தேறல்’ என்று கூறுவர். ‘மணிக்கலம்’ என்பது நீலவண்ணக் குப்பி. கள்ளை நீலக்குப்பியில் ஊற்றிவைக்கும் வழக்கம் சங்க மக்களிடையே உள்ளது. தெளிந்த நீர் நிரம்பிய சுனைக்குத் தேறல் நிறைந்த மணிக்கலம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. கள்ளில் கலங்கியக் கள் களிப்பு மிகுதியுடையது. தேறல் என்னும் கள் தெளிவும் இனிமையுடையது. மற்றொரு பாடலில்

**கள்இல் கேளிர் ஆத்திரை உள்ளூர்ப்**
**பாளை தந்த பஞ்சிஅம் குறுங்காய்**
**ஓங்கு இரும் பெண்ணை நுங்குடுபெயரும்**
**ஆதி அருமன் மூதூர் அன்ன (குறுந்-293)**

குடிக்கும் பழக்கம் உடையவர் கள்ளுக்கடைக்கு நாள்தோறும் செல்வர் அவ்வாறு செல்லும்போது கள் கிடைக்காவிட்டால் ஊரிலுள்ள உயர்ந்த கரிய பனைமரத்தின் பாளையில் ஈனப்பட்ட நாருடைய அழகிய குறுகிய காயாகிய நுங்கை உண்பர் அப்போது தான் அவர்களது வேட்கை தணியும். சங்க இலக்கியக் காலந்தொட்டே கள்ளுக்கடை இருந்ததையும் அங்கு சென்று மக்கள் கள் குடித்த செய்தியையும் சங்கப் பாடல்கள் பதிவு செய்கின்றன. நுங்கு உடலுக்குக் குளிர்ச்சி தருவதாகும் என்பதை அறிந்து சங்கத் தமிழர்களும் அதனை உணவாகக் கொண்டுள்ளனர்.

**ஊன் உணவுகள்**

பண்டைய காலத்தில் மக்கள் ஊன் உணவு உண்டதை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தோழி தலைவனின் ஏவலனைக் கண்டு வரைவுப் பற்றிக் கேட்கும் போது அவன் எல்லாம் நலம் என்று கூறுகிறான். அதனால் அவனை இனிய உணவு பெற்று மகிழ்வானாக என்று கூறுகின்றாள்.

**நெய்கனி குறும்பூழ் காயம் ஆக**
**ஆர்பதம் பெறுக தோழி அத்தை**
**பெருங்கடல் நாடன் வரைந்தென அவன் எதிர்**
**நன்றோ மகனே என்றனென்**
**நன்றே போலும் என்று உரைத் தோனே (குறுந்-389)**

நல்ல செய்தியை அறிவித்த ஏவலனுக்கு நெய் ஊறுகின்ற குறும்பூழ் சம்பாரத்தோடு கூடிய கறியாக உண்ணும் சோற்றினைப் பெறுவானாக என்று வாழ்த்தினாள். குறும்பூழ் என்பது காடை, ஏவல் மகனுக்கு ஏற்ற உணவாகக் காடைக் குழம்பைக் கூறுகின்றனர். முன்னோர்கள் காடை, கவுதாரி முதலிய பறவைகளின் ஊனையும் நெய்யில் சுட்டு உண்டனர். ஊனின் புரதச்சத்திற்குச் சுவை ஊட்ட பசுவின் நெய் பயன்படுத்தப்பட்டது என்பதற்கு இப்பாடல் சான்றாகிறது.

தலைவி தலைவன் கேட்கும்படியாக தோழிக்குக் கூறியது அதாவது ஊர் மக்கள் தூற்றும் பழிச்சொல் பொறாது வருந்திய தலைவி ஒரு நாள் தலைவன் தன் வீட்டில் வந்து நிற்பதை அறிந்து அவன் வரவை உணராதவள் போல் பேசும் இடத்தில்

**பெருங்கடற் பரதவர் கொள்மீன் உணங்கலின்**
**அருங்கழிக் கொண்ட இறவின் வாடலொடு**
**நிலவு நிற வெண்மணல் புலவப் பலஉடன்**
**எக்கர் தொறும் பரக்கும் துறைவனொடு ஒருநாள் (குறுந்-320)**

பெரிய கடலில் பரதவர் வேட்டையாடிக் கொண்டுவந்த மீன்களின் உலர்ந்த வற்றல் இறாலின் வற்றலோடு சேர்ந்து நிலவு போன்ற வெண்மணலில் உலர்த்தப்பட்ட செய்தியைக் குறிப்பிடுகிறது. மீன் உண்பது மட்டுமல்லாது மீனைக் கருவாடாக்கி உண்ணும் வழக்கமும் இருந்துள்ளது. இறால் மீன் மட்டுமல்லாது அயிரை, சுறாமீன் முதலிய மீன்களையும் உண்டுள்ளனர் என்பதை,

**………………..முன்றுரை**
**அயிரை ஆரிரைக் கணவன் தாங்கு**
**அயிரை பரந்த அந்தன் பழனத்து**
**கொடுந்திமிர் பரதவர் கோட்டு மீனெரிய**
**………………………..வருஉம்**
**பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே**

முதலிய குறுந்தொகைத் தொடர்கள் காட்டுகின்றன. மேலும், சங்க கால மக்கள் அயிரை மீனை விரும்பிப் பெருமிதத்துடன் பார்ப்பதை,

**அயிரை ஆர்இரைக்கு (குறுந்-128)**

எனும் பாடல் வெளிப்படுத்துகின்றது.

**பக்குவமாகச் சமைத்தல்**

பக்குவமாக சமைத்தலென்பது பன்னெடும் நாட்களாக சமைக்கும் அனுபவம் உள்ளவர்களால் மட்டுமே முடியும். ஆனால் பிறந்தவீட்டில் செல்லமாக வளர்ந்த தலைவியொருத்தி திருமணமானவுடன் தன் காதல் கணவனுக்காக ஆசையாகச் சமைக்கப்பட்ட உணவு இனிமையும் புளிப்பும் கலந்த சுவைமிக்க குழம்பாக அமைந்திருந்தது என்பது பற்றியும், முளிதயிர் சேர்த்துச் செய்யும் மோர்க் குழம்பு அக்கால வழக்கத்தில் இருந்துள்ளது என்பது பற்றியும்

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல் விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்**
**குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகற்**

**இனிதெனக் கணவ னுண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே (குறுந்-167)**
என்றப் பாடல் குறிப்பிடுகின்றது.

**தினைப்புனம் காத்தல்**

உணவு உற்பத்தி செய்வதற்கு மக்கள் எவ்வாறு முனைந்தா;களோ அதனைப் பாதுகாப்பதற்குத் தங்களின் பங்களிப்பினைக் காட்டினர். கிளி போன்ற பறவைகளினால் சேதாரமாகும் தினைப்பயிர்களைக் காக்க தட்டையின் மூலம் ஒலியெழுப்பி அப்பறவைகளை விரட்டினரென்பதை

**வளைவாய் சிறுகிளி வளைதினைக் கடீஇயர்**
**செல்க என்றோளே (குறுந்-141)**
**சுனைப்பூக் குற்றுத்தொடலை தைஇப்**
**புனக்கிளி கடியும் பூங்கண்பேதை (குறுந்-142)**
**தினைகிளி கடிகளனில் பகலும் ஒல்லும் (குறுந்-217)**
**தழலும் தட்டையும் முறியும் தந்துஇவை (குறுந்-223)**
**எனும் பாடல் வரிகளிலும், (குறிஞ்சி பாட்டு:38), (குறிஞ்சி பாட்டு:43-44), (மலை: 328 - 329)**
எனும் பாடல் வரிகளிலும் காணப்படுகின்றன.

உணவுகளைச் சேதாரமாக்கும் பறவைகளை விரட்டியது ஒருபுறமிருக்க, தலைவன் வருகையை அறிவித்த காக்கைக்குத் தலைவி நெய் கலந்த வெண்ணெல்லரிசிச் சோறு வைப்பதை,

**விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" (குறுந்-210)**
எனும் பாடல் குறிப்பிடுகின்றது.

**உணவும் விருந்தோம்பலும்**

ஆதிமனித நிலையில் தனக்காக உணவு வேட்டையாடி, தான் மட்டுமே உண்டு, கூட்டமாகக் கூடி வாழ ஆரம்பித்ததன் விளைவாகப் புதியவர்களை வரவேற்று உணவு உபசரிக்கும் பண்பாடு வளர்ந்தது. இதனை

**விருந்து புறத்தாத் தானுண்ட சாவா**
**மருந்தெனினும் வேண்டாற் பாற்றன்று (குறள்.)**
**நீரின்று அமையா யாக்கை எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (புறம்.18:18-20)**
**படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்**
**உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் (புறம்.188)**

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. பாரதப் போர் நிகழ்ந்தபொழுது சேரநாட்டின் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் இருநிறத்துப் படைகளுக்கும் உணவு வழங்கினான் என்பதை,

**அலங்குளைப் புரவி ஐவரோடு சினை,**
**நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை**
**ஈரைம் பதின்மரும்பொருது, களத்து ஒழியப்**
**பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய் (புறம்.2)**
எனும் பாடல் அடிகள் உணர்த்துகின்றன.
மனிதன் போல பறவைகளும் தன் குஞ்சுகளுக்கு இரை தேடுகின்றனவென்பதை,

**பிள்ளை உள்வாய்ச் செரீஇய**
**இரைகொண்டு அமையின் விரையுமால் செலவே (குறுந்-92)**
**இரைவேட்டு எழுந்த சேவல் உள்ளிப்**
**போறிமயிர் எருத்தின் குறுநடைப் பேடை" (குறுந்-154)**
முதலிய பாடல் அடிகள் காட்டுகின்றன.

**முடிவுரை**

உடம்பார் அழியின் உயிரார் அழிவர் எனும் வாக்கின்படி உடம்பைப் பேணுதலே உயிரைப் பேணுதற்கு உரிய முதல்செயலாகும். நம் முன்னோர்கள் உண்ணக்கூடிய உணவிற்கு முக்கியத்துவம் அளித்து உடம்பைப் பாதுகாத்து உள்ளனர். இருப்பினும், ஓரறிவு உயிரினம் முதல் ஐந்தறிவு உயிரினம் வரை உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் உணவு என்பது தன் பசியோடு நின்று விடுகின்றது. ஆனால், ஆறறிவு மனிதன் மட்டுமே தன் பசியோடு நின்று விடாமல் பிற உயிரினத்தையும் பேணும் “ஈதல் இசைபட வாழ்தல்” எனும் அறக்கோட்பாட்டை முன்னிறுத்தி, மாபெரும் அறக்கலையாய் உணவியலை அமைத்துள்ளான். இதனைப் பழந்தமிழ் இலக்கியங்கள் உணர்த்துகின்றன.